முருகப்பெருமான் துணை

**மகான் காரைக்கால் அம்மையார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

28.04.2021, புதன்கிழமை

1. தருமபலம் கொண்ட ஞானியே
தவசியாக வந்த யோகியே
பெருமை மிக்க ஞான வழிகளை
பெருந்தயவாக அருளும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் யோகபிரசன்ன ஆசி
வரங்களாக பிலவ தகர் திங்கள்
வல்லமைபட மூவை திகதி புந்தி வாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 15ம் நாள், 28.04.2021 புதன்கிழமை)
3. வாரமதில் காரைக்கால் அம்மையாரும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
சோரமிலா மக்கள் சமூகத்தை
சுத்தநெறி கொண்டு உருவாக்க
4. ஆக்கமுடன் ஞான சேவையாற்றும்
ஆறுமுகஞானி மலரடி பற்றி
தேக்கமின்றி தரும வழிகளை
தொடர்ந்து மக்கள் வருக
5. வருகவே தயவான வாழ்வாய்
வரும் மக்கள் வாழ்க்கை தேறி
தரும பலமும் கூடி உலகோர்க்கு
தனித்துவமும் மாற்றமும் காணும்
6. காணவே அரங்கன் தேடுகின்ற
கலியுக ஞானியர் படைகளில்
ஞானவான்களாக இணைந்துமே
ஞான ஆட்சிக் காலம் அமைய உண்டான
7. உண்டான அற்புதம் நடக்கும்
உண்மைபட அரங்க ஞானியரின்
தொண்டு வழி வர ஆற்றல் கூடும்
தெய்வநிலை மக்களிடை கூடி
8. கூடியே இந்த கலியுகம்
குறைவிலா ஞானயுகமாக மாற்றம்
நாடியே சடுதி அற்புதம் நிகழும்
நன்மைதரும் தரும வழிகள் தன்னை
9. தன்னையே பூரண ஞானமாக
தரணியோர் எற்று சரணடைவு
அண்ணல் அரங்கன் பதம் பணிந்து
அகிலமே சன்மார்க்கம் ஏற்றிட

10. ஏற்றிட உயர் பாதுகாப்பு
எல்லா உயிர்கட்கும் நலிவில்லா
ஆற்றலும் நல்ல தேற்றமும் கூடி
அகிலமே வியக்கும்படி மக்கள் சமூகம்

11. சமூகம் ஞானிகள் தயவு கூடி
சர்வ சித்திமிகு ஞானகீர்த்தியாகி
சமூகமே பேரற்புதம் நிகழ்த்தும்
சடுதி ஞானயுகமாற்றம் காணும்
யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—